மாண்புமிகு திரு. மு. கருணாநிதி - வடிகால்கள் வெட்டுவதற்கு அவ்வப்பொழுது வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சர்வே முதலியவையும் செய்யப்படுகின்றன. ஊராட்சி மன்றத்தின் குடிமராமத்தில் அவை இருப்பவை அல்ல. 25 சதவீதம் ஊராட்சி மன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொன்னேன்.

திரு. சா. மெய்யப்பன் : சார், அகற்றிய நாணல் தட்டைகளை பாய்கள் பின்னுவதற்கும், தட்டிகள் பின்னுவதற்கும் உபயோகப்படுத்திக்கொண்டு அதன் மூலம் வருமானம் சம்பாதிப்பதற்கு அரசு முயற்சிக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாணல் அகற்றப்படுவதல்ல. அகற்றப்படுவது ஆகாசத் தாமரை போன்றவைதான், நாணல் அல்ல.

நத்தம்–செந்துறைச் சாலையில் பாலங்கள் கட்டுதல்.

* 193 **வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம்-செந்துறைச்சாலையில் உள்ள, விரிச்சாலாறு, பாலாறு, திருமணி முத்தாறு (செந்துறைக்கு அண்மையில் உள்ளது) ஆகியவற்றின் மீது பாலம் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப் பெற்றும் இதுநாள் வரை வேலைகள் தொடங்காததற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நத்தம்-செந்துறைசாலையில் பாலாறு, மணிமுத்தாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் வேலை மட்டுமே 1968–69-ம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். நிதிக்குறைவின் காரணமாக விரிச்சலாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் வேலையை மேற்கொள்ளுவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போதில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, 1967–68-ம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பால வேலைகள் என்ன என்ன ? அவற்றின் மதிப்பீட்டுச் செலவுகள் என்ன என்ன ? 1968–69-ல் ஒப்புதல் அளிக்கப்பட இருக்கிற பால வேலைகள் என்ன என்ன ? அதற்காக ஒதுக்கப்பட இருக்கிற பணம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1967–68-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பால வேலைகள் கீழ்வருவன :

1. தென் ஆற்காடு மாவட்டத்தில் சூணம்பெட் சாலை. இதற்கு ஒதுக்கப்பட்ட பணம் 2·12 லட்ச ரூபாய்.

2. தென் ஆற்காடு மாவட்டத்தில் சூணம்பெட் சாலையில் இன்னொரு பகுதி, ஒதுக்கப்பட்ட பணம் 3 லட்ச ரூபாய்.

3. கோவை மாவட்டத்தில் அந்தியூர்-அம்மாபெட் சாலை. ஒதுக்கப்பட்ட பணம் 2·60 லட்ச ரூபாய்.

4. கோவை மாவட்டத்தில் திருப்பூர் நகர எல்லைக்குள் உடுமலை—திருப்பூர் சாலை. ஒதுக்கப்பட்ட பணம் 5·75 லட்ச ரூபாய்.

5. தஞ்சை மாவட்டத்தில் ஆலங்குடி—தலைஞாயர் சாலை. ஒதுக்கப்பட்ட பணம் 3 லட்ச ரூபாய்,

ஆக மொத்தம் 16·47 லட்ச ரூபாய் 1967–68-ல் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

1968–69-ல் ஒப்புதல் அளிக்கப்பட இருக்கும் பால வேலைகள் ஆறு' அவை கீழ்வருமாறு :—

1. தர்மபுரி மாவட்டத்தில் ஒசூர் தல்லி சாலை, இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 0·30 லட்ச ரூபாய்.

2. தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூர் டிவிஷனில் குள்ளன் சாவடி—காட்டு கூடலூர் சாலை ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 1·50 லட்ச ரூபாய்.

1968 மார்ச் 12]

3. தென் ஆற்காடு மாவட்டத்தில் விழுப்புரம் டிவிஷனில் பாப்பனப் பட்டி—வழுதூர் சாலை. ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 12·00 லட்ச ரூபாய்.

4. தஞ்சை மாவட்டத்தில் முத்துப்பேட்டை—மீமிசல் சாலை. ஒதுக்கப் படுகிற பணம் 10·00 லட்ச ரூபாய்.

5. மதுரை மாவட்டத்தில் நத்தம்—செந்துறை சாலை, ஒதுக்கப் படுகிற பணம் 1·50 லட்ச ரூபாய்.

6. மதுரை மாவட்டத்தில் நத்தம்—செந்துறை சாலை. ஒதுக்கப்பட்டிருக் கிற பணம் 1·00 லட்ச ரூபாய்.

ஆக மொத்தம் இந்த ஆறு வேலைகளுக்காக 1968–69-ல் ஒப்புதல் அளிக்க இருக்கின்ற மொத்த ஒதுக்கீடு ரூ. 26·30 லட்சம்.

மாவு அரைவு ஆலைகள்

*194 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு வரு வாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் (Roller Flour Mills) மாவு மில் ஒன்று ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள் ளதா ?

(இ) இத்தகைய மில்கள் நமது ராஜ்யத்தில் எந்தெந்த மாவட்டங் களில் இப்போது இயங்கி வருகின்றன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :

(அ) இல்லை.

(இ) சென்னை நகரம், கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சி ராப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்பொழுதே போதுமான அளவுக்கு மாவு கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் அடிக்கடி ரொட்டிக் கடைகளும், ஹோட்டல்களும் கதவடைப்பு செய்யக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. போதுமான அளவுக்கு இதில் உற்பத்தியைச் செய்யக் கூடிய அளவுக்கு, அது எந்த மாவட்டத்திலே இருந்தாலும் சரி, இது போன்ற மாவு ஆலைகளை மேலும் ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாவு ஆலைகளுக்கு உரிமம் வழங்குகின்ற உரிமை மத்திய அரசிடத்திலே இருக்கிறது. சமீபத்திலே இங்கிருந்து போகின்ற விண்ணப்பங்கள் எல்லாம் நிராகரிக்கப்படுகின்றன. தமிழகத்தில் மேலும் நான்கு மாவு ஆலைகள் வேண்டுமென்று அதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியிலே சொல்லப்பட்டு செங்கற்பட்டு, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே அவற்றிற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, சென்னையில் இப்பொழுது மாவு கிடைக்கவில்லை. ஆரம்பிக்கப்பட்டிருக்கிற ஆலைகளில் எவ்வளவு மாவு உற்பத்தியாகிறது ? தமிழ்நாட்டுக்கு அது போதுமா ? போதாது என்றால் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்த என் தயக்கம் காட்டுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மாநிலத்தில் போதிய மாவு ஆலைகள் வேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தி இருக் கிறோம். ஆலைகள் வந்த பிறகுதான் எவ்வளவு உற்பத்தியாகும் என்று சொல்லமுடியும்.